பிரதம ஆசிரியர்

யாழ்ப்பாணம்

29-10-2021

ஐயா,

**<u>செய்தி ஒன்றை தங்களது பத்திரிகையில் பிரசுரிப்பது தொடர்பானது.</u>**

24-10-2021 கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று வரலாற்றில் முதற்தடவையாக லயன்ஸ் மாவட்டம் 306பி1 இன் வடமாகணத்தில் உள்ள லயன்ஸ் கழகங்கள் இணைந்து வென்னப்புவ பிரதேசத்திற்கு நட்புறவு பயணத்தை மேற்கொண்டு வயம்ப பிராந்தியத்தில் உள்ள லயன்ஸ் கழகங்களுடன் இணைந்து வென்னப்புவ பிரதேசத்தில் கொரியா நாட்டு லயன்ஸ்களின் நிதிப்பங்களிப்பில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உருவாக்கப்பட்ட வீட்டுத்திட்ட கிராமத்தில் வசிக்கும் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு ஒரு தொகை உலர் உணவப்பொதிகளை வழங்கிவைத்தது.

இச்சேவைத்திட்டத்தில் வடமாகாணத்தில் உள்ள இருபதிற்கும் மேற்பட்ட லயன்ஸ் கழகங்கள் தங்கள் பங்களிப்பை வழங்கியதுடன் நேரடியாகவும் சென்று கையளித்திருந்தனர்.

இச்சேவைத்திட்டத்தை மாவட்டம் 306பி1 ஆளுநரின் வறுமை ஒழிப்பு மற்றும் பசிப்பிணி போக்குதல் செயற்திட்டத்திற்கான பிரதான இணைப்பாளரும் கொச்சிக்கடை லயன்ஸ் கழக உறுப்பினருமான லயன்.ரஜித றொட்றிக்கோ அவர்களுடன் இணைந்து மாவட்ட ஆளுநரின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மரநடுகை செயற்திட்டத்திற்கான பிரதான இணைப்பாளரும் யாழ்ப்பாண லயன்ஸ் கழக உறுப்பினருமான லயன்.கு.ஜெயந்தன் அவர்கள் ஒழுங்கமைத்திருந்தார்.

இவ் நட்புறவுப்பயணத்தின்போது வடமாகாண லயன்ஸ்களின் நட்புறவு சமிக்ஞையாக யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய பலகாரங்கள் ,பனைசார் உணவுகள் , இனிப்பு வகைகள் என்பன வயம்ப பிராந்திய லயன்ஸ் கழக உறுப்பினர்களுக்கு பகிரப்பட்டதுடன் வயம்ப பிராந்திய லயன்ஸ் கழக உறப்பினர்களால் வடமாகாணத்தில் இருந்து சென்ற லயன்ஸ்கழக உறுப்பினர்களுக்கு நன்றியறிதல் பொறிக்கப்பட்ட நினைவுப்பரிசுளும் வழங்கிவைக்கப்பட்டது.

வடமகாணத்தில் இருந்து நட்புறவுப் பயணம் மேற்கொணடிருந்த லயன்ஸ் கழக உறுப்பினர்களுக்கு வயம்ப பிராந்தியத்தில் உள்ள லயன்ஸ் கழகங்களால் வழங்கப்பட்ட மதிய உணவு விருந்துபசாரத்தடன் இவ் நட்புறவுப் பயணம் இனிதே நிறைவடைந்தது.

நன்றி

இப்படிக்கு,

கு.ஜெயந்தன்

பீரதம இணைப்பாளர்